
# மாநிலங்களைக் காப்போம்; இந்தியாவைக் காப்போம்! "இந்தியா" கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம்!

## "Speaking for India" பாட்காஸ்ட் 3-ல் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி! முதல் பக்கத் தொடர்ச்சி

இவர்கள் செய்வதில் மிக மோசமானது என்ன என்றால், மாநிலங்களின் கல்வி உரிமையில் தலையிட்டு, குழந்தைகளின் எதிர்காலத்தோடு விளையாடுவதுதான். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு பண்பு இருக்கிறது - ஒரு கலாச்சாரம் இருக்கிறது - அவர்களுக்கு என்று தனிப்பட்ட சிந்தனை இருக்கிறது. இதையெல்லாம் அழிப்பதற்கான கொள்கைதான் தேசிய கல்விக் கொள்கை! இவ்வாறு பா.ஜ.க. ஆட்சி பறித்த உரிமைகளை ஒன்று ஒன்றாகப் பட்டியல் போட வேண்டும் என்றால், இன்னும் பத்து எபிசோட் பேசலாம்.



இது எல்லாவற்றில் இருந்தும் நம்மைப் பாதுகாக்க இருக்கும் ஒரே கவசம், மாநில சுயாட்சிதான்! அதனால்தான், பேரறிஞர் அண்ணாவும் - முத்தமிழறிஞர் கலைஞரும் மாநில சுயாட்சியை வலியுறுத்தினார்கள். நானும் வலியுறுத்திக்கொண்டு இருக்கிறேன். 1974-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர், நாட்டுக்கே முன்னோடியாக, மாநில உரிமைகளுக்கு வலுசேர்க்க இராஜமன்னார் குழு அமைத்தார்; அந்தக் குழுவின் பரிந்துரைகளைச் சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாநில சுயாட்சித் தீர்மானமாக நிறைவேற்றினார். அந்த தீர்மானத்தில், முக்கிய மான சில வரிகளை மட்டும் சொல்கிறேன்...




**இராசமன்னார் குழுவின் பரிந்துரைகள் இரண்டு அவைகளிலும் நிறைவேற்றம்!**

"மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும், மாநில சுயாட்சி பற்றியும் இராசமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துரைகளை மத்திய அரசு ஏற்று, மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது". இந்த தீர்மானத்தைத் தமிழ்நாட்டில் அப்போது இருந்த இரண்டு அவைகளிலும் நிறைவேற்றினார்.


இவ்வாறு நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தைத்தான், அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களும், "These are important issues and we intend to consult all the Chief Ministers" என்று சொன்னார். தலைவர் கலைஞர் தி.மு.க. வின் கொள்கைகளை ஐம்பெரும் முழக்கங்களாகச் சொன்னார். அதில் ஐந்தாவது முழக்கம், "மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!"

இந்தக் குரலைத் தெற்கில் மட்டுமல்ல, வடக்கில் காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் அப்துல்லா - கிழக்கில் வங்கத்தில் பொதுவுடைமைத் தோழர், ஜோதி பாசு ஆகியோரும் எதிரொலித்தார்கள்.

இன்றைக்கு ஒன்றியத்தின் ஆட்சிப் பொறுப்பின் கடைசிக் கட்டத்தில் இருக்கும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். விரும்பும், சர்வாதிகாரம் கொண்ட ஆட்சியை உருவாக்க நினைக்கிறது!. அதனால்தான் அவர்கள் அரசியல் சட்டப்படியும் ஆட்சி நடத்தவில்லை; மாநிலங்களையும் மதிக்கவில்லை!




மாநிலங்களைச் செயல்படவிடாத ஒன்றிய அரசு, மாநில அரசின் சம்பளத்தைப் பெற்று மாநில நலனுக்கு எதிராக செயல்படுகிற ஆளுநர்கள், இவர்களை வைத்துக் கொண்டே எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை எதிர்க்கட்சி ஆளுகிற மாநிலங்களால் செய்ய முடிகிறது என்றால், கூட்டாட்சி நெறிமுறைகளை மதிக்கும் ஒரு




ஆட்சி, ஒன்றியத்தில் அமைந்தால், எல்லா மாநிலங்களும் மேலும் செழிக்கும்.

**மாநில சுயாட்சி வெல்ல "இந்தியா" கூட்டணி ஆட்சிக்கு வர வேண்டும்!**

மாநில சுயாட்சி என்ற கொள்கை வெல்ல வேண்டும் என்றால், இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வர வேண்டும். அதற்கு மக்கள் தயாராக வேண்டும். வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, மினி நாடாளுமன்றத் தேர்தலாகப் பார்க்கப்படும் ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடக்க இருக்கிறது. அதில் வாக்களிக்கப் போகும் வாக்காளப் பெருமக்களும் இதை மனதில் வைத்து வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிறைவாக, இந்த எபிசோடைக் கேட்ட உங்களிடம் உரிமையோடு நான் கேட்பது, **இந்தியா கூட்டணியின் கையில், இந்தியாவை ஒப்படையுங்கள். மாநிலங்களைக் காப்போம்! இந்தியாவைக் காப்போம்! இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைப்போம்!**

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### இளைஞர்களுக்கு இணையதளம் இருந்தால் மட்டும் போதுமா?

## வெற்று அலங்கார வார்த்தைகளை மட்டுமே உதிர்க்கிறார் மோடி!

### 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

*சென்னை, நவ.1- 'தீக்கதிர்' நேற்று (31.10.2023) தீட்டியுள்ள தலையங்கம் வருமாறு:-*


தீக்கதிர்
2023 அக்டோபர் 31 செவ்வாய்க்கிழமை

இளைஞர்களுக்கு இணையம் மட்டும் போதுமா?

பிரதமர் நரேந்திர மோடி 2014 மக்களவைத் தேர்தலின்போது ஆண்டுக்கு 2 கோடிப் பேருக்கு வேலை தருவோம் என்று வாக்குறுதி அளித்தார். அவர் ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகள் ஆகிறது. அவர் வாக்களித்தபடி இளைஞர்களுக்கு வேலை கொடுத்திருந்தால் 20 கோடிப் பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவது மட்டுமல்ல, வேலையில் இருந்தவர்களும் வீதிக்கு விரட்டப்பட்டுள்ளனர்.

ஆனால் பிரதமர் மோடி வாய்ப்பந்தல் போடுவதில் மட்டும் ஒன்றும் குறைவில்லை. 'மனதின் குரல்' 106ஆவது நிகழ்ச்சியில் பேசிய

*பிரதமர் நரேந்திர மோடி 2014 மக்களவைத் தேர்தலின்போது ஆண்டுக்கு 2 கோடிப் பேருக்கு வேலை தருவோம் என்று வாக்குறுதி அளித்தார். அவர் ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகள் ஆகிறது. அவர் வாக்களித்தபடி இளைஞர்களுக்கு வேலை கொடுத்திருந்தால் 20 கோடிப் பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவது மட்டுமல்ல, வேலையில் இருந்தவர்களும் வீதிக்கு விரட்டப்பட்டுள்ளனர்.*

*ஆனால் பிரதமர் மோடி வாய்ப்பந்தல் போடுவதில் மட்டும் ஒன்றும் குறைவில்லை. 'மனதின் குரல்' 106ஆவது நிகழ்ச்சியில் பேசிய அவர், 'மேரா யுவபாரத்' என்ற பெயரில் இளைஞர்களுக்கான பிரத்யேக இணையதளம் உருவாக்கப்படும் என்றும் இதில் இளைஞர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும் நாட்டை கட்டியெழுப்பும் பணியில் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த இணையதளத்தில் இணைபவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது குறித்து பிரதமர் மோடி எதுவும் குறிப்பிடவில்லை. மாறாக, வழக்கம்போல வெற்று அலங்கார வார்த்தைகளையே இப்போதும் உதிர்த்திருக்கிறார்.*

*பண்டிகைக் காலம் நெருங்குவதால் உள்ளூர்ப் பொருட்களை வாங்குமாறும், அதற்கு பணத்தை பயன்படுத்தாமல் யுபிஐ முறையில் பணம் செலுத்துமாறும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். உள்ளூர்ப் பொருட்களை வாங்க வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் நாட்டின் அனைத்துத் துறைகளையும் அந்நியருக்கு அகல திறந்துவிடும் போக்கை பின்பற்றும் ஒன்றிய அரசு மக்களுக்கு மட்டும் இலவச உபதேசம் வழங்குவதில் அர்த்தம் உண்டா?*

*பணமதிப்பிழப்பு நடவடிக்கையை அறிவித்த போது, யுபிஐ முறையை ஊக்குவிப்பதும் அரசினுடைய நோக்கம் என்று கூறப்பட்டது. பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி வரி, விலைவாசி உயர்வு போன்றவற்றால் மக்களிடம் பணப் புழக்கம் குறைந்துள்ளது. அதை அதிகரிக்க ஒன்றிய அரசு எதுவும் செய்வதில்லை. ஆனால் டிஜிட்டல் கரன்சியை ஊக்குவிக்க வேண்டும் என்ற பெயரில் தொடர்ந்து மக்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. தங்களிடம் இல்லாத பணத்தை எந்த முறையில் பயன்படுத்துவது என்பதுதான் மக்களின் கேள்வி?*

*நவம்பர் 15ஆம் தேதி பிர்சா முண்டாவின் பிறந்தநாளை பழங்குடி மக்கள் பெருமை தினமாகக் கொண்டாடவுள்ளதாகவும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். பழங்குடி மக்களின் வன நிலங்களை கார்ப்பரேட் கொள்ளையர்களுக்கு கைமாற்றி விடும் ஒன்றிய அரசு அவர்களை பெருமைப் படுத்துவதாகக் கூறுவது வெறும் ஏமாற்று வேலையே ஆகும்.*

*இவ்வாறு 'தீக்கதிர்' தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

---

### சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

## மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி: பரிசு வழங்கல்!

### எம்.எஸ்.ஹரிபாபு தலைமையில் - எஸ்.பாஸ்கரன் பரிசு வழங்கினார்!

*சென்னை, நவ. 1 - சென்னை தெற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாணவர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.அரிபாபு தலைமையில் மாவட்டக் கழகப் பொருளாளர் எஸ்.பாஸ்கரன் எம்.சி. பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.*

*தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட கலை,இலக்கியபகுத்தறிவுப் பேரவை சார்பில் தரமணி சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் கலைஇலக்கிய,பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் ஆ.மாகதேவன்தலைமையில்,மாவட்ட அமைப்பாளர்எம்.எஸ்.ஹரிபாபு, மாவட்ட தலைவர் ஆர்.ஜாரு_ஆனந்த், துணை தலைவர் வெ.புருஷோத்தமன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆர். சுரேஷ்,எஸ்.மாரிமுத்துமுன்னிலையில்பேச்சுப்போட்டி நடத்தப்பட்டது. போட்டியில்வெற்றிபெற்றமாணவர்களுக்கு சென்னை தெற்கு மாவட்ட பொருளாளரும் 178வது மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி எஸ். பாஸ்கரன்பரிசுவழங்கினார்.*

*அதுபோது 178 (அ) வட்டக் கழக செயலாளர் தே. கோபி, 178 வது வட்ட கழக செயலாளர் த.பார்த்திபன், மக்கள் குரல் நா.ஷாம்குமார், தலைமை ஆசிரியர் , ஆசிரியர் பெருமக்களும் , வட்ட கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

